REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 12 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 295 | December 12,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

ஆகம கல்விக்காக கிளிநொச்சியில்

## அந்தணர் குருகுலத்திற்கு நிரந்தர கட்டடம்

விபரம் 03 ஆம் பக்கம்

அமைச்சர் டக்ளஸ் வழங்கிவைப்பு



## கொரோனாவினால் இறக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பில் சாதக சூழல்

பிரதமர் மற்றும் பசிலுடனான முஸ்லிம் எம்.பிக்களின் பேச்சில் திருப்தி



**ஷம்ஸ் பாஹிம்**

கொரோனாவினால் இறக்கும் முஸ்லிம்களின் சடலங்களை புதைப்பது தொடர்பில் அரசாங்கத்திலுள்ள முக்கிய தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் சாதகமாக அமைந்துள்ளதாக ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தெரிவித்தனர்.

ஏற்கெனவே ஆளும் தரப்பு எம்.பிகள், நிபுணர்குழு உட்பட பலருடன் பேச்சு நடந்த நிலையில் நேற்று முன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பு நம்பிக்கை தரும் வகையில் சாதகமான

06




கொவிட் 19 சுகாதார பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கென கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை முகாமை செய்யும் நிறுவனமான கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையங்கள் (Colombo International Container Terminals CICT) நிறுவனம் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை (ரூ.18.6 மில்லியன்) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜக் ஹுவாங்க் மற்றும் பிரதம நிதி அலுவலர் றேமொன்ட் மூ ஆகியோர் இணைந்து கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

பழைய அல்லது புதிய முறைக்கு




## மாகாண ச… லை விரைவாக … ஏற்பாடு

கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய பிரதமர் அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் ஏற்கனவே பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

மாகாண சபை மூலம் மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க அவகாசம் கிடைக்காததால் அந்த மக்கள் தமது சேவைகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பசில் ராஜபக்ஷ அப்போது தெரிவித்திருந்தார்.

எவ்வாறெனினும் புதிய தேர்தல் ஆணைக்குழு செயற்படத்

06



## ஒரு இலட்சம் பேர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தலில்!

கம்பஹாவிலே அதிகமானோர் -அஜித் ரோஹண

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் பேர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இதற்கமைய, நிகழ்கால தரவுகளின் அடிப்படையில்

06

## மேல் மாகாணத்திற்கு வெளியே துணை கொரோனா கொத்தணி அபாயம்



மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ள பகுதிகளில் துணைக் கொரோனா கொத்தணிகள் உருவாகும் ஆபத்து இருப்பதாக இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

குறித்த பகுதிகளில் காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் மூலங்களைக்

06

உயிரிழப்போர் உடலில் 36 நாட்கள் வாழும் கொரோனா வைரஸ்;

## ஆரோக்கியத்தை பாதிக்கும் காரணிகளை இன, மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது

முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் பிரதமர் மஹிந்த விளக்கம்

ஆரோக்கியத்தை பாதிக்கின்ற காரணிகளை இனம் மற்றும் மத அடிப்படையில் தீர்மானிக்க முடியாது. சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு அனைத்து இன மக்களதும் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொவிட்19 தொற்றினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்வது தொடர்பில் ஆராயும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், சுகாதார தரப்பின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று பாராளுமன்ற வளாகத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

06

## மலையக பல்கலைக்கழகம் கொட்டகலையில் பாடத்திட்டங்கள் குறித்து விரைவில் முடிவு

வீட்டுத்திட்டமும் ஜனவரி முதல் ஆரம்பம் – ஜீவன் தொண்டமான்

**ஹற்றன் விசேட நிருபர்**

மலையக பல்கலைக்கழகம் அமைப்பதற்கான இடம் கொட்டகலையில் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மலையக புத்திஜீவிகளுடன் கலந்துரையாடி பாடத்திட்டங்கள் தொடர்பில் முடிவெடுக்கப்படும்.



அதேபோல மலையகத்துக்கான தனி வீட்டுத் திட்டம் ஜனவரி முதல் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை, வட்டகொடையில் அமைந்துள்ள பிரஜாசக்தி நிலையத்தில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஊடாக மலையக மக்களின் பொருளாதாரத்தை

06

தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கு தீர்வினைக்காண

## தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்

20 நாள் குழந்தை செய்த பாவம் என்ன?

## மனமுடைந்து வெறுப்பின் எல்லையை கடந்துள்ளேன்

சமகால அரசியல்; உடல்கள் அடக்கம் செய்தல்

## அவசரமாக கூடி ஆராயவுள்ள மு.காங்கிரஸ் முக்கியஸ்தர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான நா…

கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்